DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: MC. No.3/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

-----------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ஷீலா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.நீதிபாலன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Respondent present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 24.09.2025

---

**குறுக்கு விசாரணை**

1. எதிர்மனுதாரரின் பெற்றோர் திருமணத்தின்போது எனக்கு தாலிசெயின் போட்டனர் என்றால்சரிதான். திருமணத்தின்போது எனக்கு எங்கள் வீட்டிலிருந்து எத்தனைபவுன் நகை போட்டனர்என்ற விவரம் எதிர்மனுதாரருக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள மனுவின் பாரா எண்.8,9,10,11,12,13,15,17,18,19 மற்றும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பாராஎண் 6,7,8,9,10,11,12,13,14,15,16,17 ஆகியவற்றில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவின் பத்தி எண்.7 மற்றும் நிரூபண வாக்குமூலம் பத்தி எண் 5 ல் எனக்கும் எதிமனுதாரருக்கும் திருமண நடந்ததாக சொல்லப்படும் தகவல் மற்றும் எங்களுக்கு திருமணத்தின் வாயிலாக குழந்தை இல்லை என்று சொல்லப்படும் தகவல் மட்டும் தான் சரி என்றும் மீதமுள்ள தகவல்கள் அனைத்தும்பொய் என்றால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள மனுவின் பாரா எண்.16 மற்றும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பாராஎண் 14 ஆகியவற்றில் சீர்வரிசைகள் எதிரிமனுதாரர் வசம் உள்ளது என்பதை தவிர மீதமுள்ள அனைத்து சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர்மனுதாரர் மண்ணாடிமங்கலத்தில் 15,00,000 மதிப்புளள சொந்த வீடு வைத்திருப்பதாகவும், 4 ஏக்கரில் வாழை தோப்பு வைத்துள்ளதாகவும், மேலும் காலி மனை வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளேன். ஆனால் மேற்படி எதிர் மனுதாரர் வசம் சொத்துகள் உள்ளது என்பதற்கு ஆதரவாக இவ்வழக்கில் ஆவணங்கள் நான் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மாதம் ரூ.40,000 சம்பாதிப்பதாக இவவழக்கில் நான் கூறியுள்ளேன். அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் அது குறித்து ஆவணம் கிடைக்கவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நான் கூறியுள்ளது உண்மைதான்.

3. நான் இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தனக்கு நடந்த முதல் திருமணத்தை மறைத்து என்னை திருமணம்செய்து கொண்டதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு நடந்த முதல் திருமணம் குறித்து அது சட்டப்படி விவாகரத்து ஆனது குறித்தும் எனது வீட்டாருக்கு தெரிந்து எனது சம்மதத்தின்பேரில்தான் எதிர்மனுதாரருடன் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. எனக்கு எதிர்மனுதாரருடன் மதுரையில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான்.

4. திருமணம் மதுரையில் நடைபெற்றதால் திருமண செலவுகளை எதிர்மனுதாரரின் வீட்டார்தான் பார்த்துகொண்டனர் என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளவாறு எதிர்மனுதாரரோ அவரது குடும்பத்தினரோ என்னை

துன்புறத்தவில்லை என்றால் சரியல்ல.நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A.B.Ed படித்துள்ளேன். நான் தற்போது ஆசிரியராக வேலை பார்த்து வரும் ஆர்எஸ் மங்கல செங்குடி செனட் மைக்கேல் பள்ளியில் இருந்து மாதம் எவ்வளவு சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் நான் தற்போது வேலை பார்க்கவில்லை. நான் மேற்படி பள்ளியில்ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கிற்காகபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் திருமணம் நடைபெற்றபிறகு எந்த வேலைக்கும் செல்லவில்லை.

5. எதிர்மனுதாரர் மதுரை விறகுனூரில் உள்ள ஸ்டாலின் ஆட்டோ கம்பெனியில் வேலை பார்த்து மாதம் ரூ.15000 சம்பாதித்துவருகிறார் என்றால் சரியல்ல.மதுரை கியா ஷோருமில் Advisor ஆக பணிபுரிந்து மாதம் 50000 சம்பாதித்து வருகிறார். எதிர்மனுதாரர் வேலை பார்த்து கிடைக்கும் சொர்ப வருமானத்திலிருந்து அவருடைய உணவு உடை இருப்பிடம் மற்றும் அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்யமுடியாமல் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னிடம்சேர்ந்து வாழ வேண்டும் என கோரி மதுரை கூடுதல் மாவட்டநீதிமன்றத்தில் IDOP No.367/2022 என தாக்கல் செய்த வழக்கில் நான் ஆஜார் ஆகிவந்தேன் என்றால் சரிதான்.

6. மேற்படி வழக்கு 3 வருடமாக நிலுவையில் இருந்தபோதிலும் நான் அவருடன் சோந்து வாழ்வதற்கு விருப்பம் காட்டாததால் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்காக மேற்படி வழக்கை திரும்ப பெற்று கொண்டார் என்றால் சரியல்ல. தற்போது எதிர்மனுதாரர் விவகாரத்து வழக்கு தாக்கல்செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். எனது அண்ணன் என்ன வேைலை செய்கிறார் என்றால் அவர் PT ஆசிரியர்.

7. நான் எனது அண்ணன் மற்றும்எனது தந்தை தாயார் ஆகியோர் தற்போது சேர்ந்து வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தந்தைக்கு விவசாய நிலத்தை தவிர வேறு என்ன சொத்துகள் உள்ளன என்றால் வேறு சொத்துகள் இல்லை. எனக்கு எதிர்மனுதாரருடன் ஏற்பட்ட திருமணத்தின் போது எனது வீட்டில் இருந்து எத்தனை

பவுன் நகைகள் போட்டனர் என்று எதிர்மனுதாரருகது தெரியாது என்றாலும் நான் தற்போது வரை ஆர்எஸ் மங்கலம் செண்ட் மைக்கேல் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து சம்பாதித்து வருகிறேன் என்றாலும் எதிர்மனுதாரரை துன்புறுத்தும்நோக்கில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிர்மனுதாரர் தனக்கு கிடைக்கும் சொற்ப வருமானத்தை கொண்டு எனக்கு எவ்வித பராமரிப்பு செலவும் கொடுக்க இயலாது என்றாலும் சரியல்ல.

8. நான்இந்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது DVC 8/2024 வழக்கு தாக்கல்செய்யப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்துவருகிறது என்றால் சரிதான். மேற்படி DVC 8/2024 வழக்கை நான் ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இம்மனுவில் நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கதக்கதல்ல என்றும் நான் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய மனு என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.